# தினசரி நடப்பு நிகழ்வுகள் - 23.07.2018

## தமிழக நிகழ்வுகள்

- தமிழகத்தில் உள்ள அனைத்து மருத்துவ கல்லூரிகளிலும் ஜூலை 23 முதல் பிளாஸ்டிக் தடை அமலுக்கு வந்துள்ளது.



- கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் டெம்பல் ஜுவல்லரி எனப்படும் கோவில் ஆபரணத்திற்கு புவிசார் குறியீடு கிடைத்துள்ளது.




- தமிழகத்தில் முதன் முறையாக பாதாள கழிவுகளை சுத்தம் செய்ய தானியங்கி இயந்திரம்(ரோபோ) பயன்படுத்தும் முதல்

நகராட்சி என்னும் பெருமையை கும்பகோணம் நகராட்சி பெற்றுள்ளது.



**இந்திய நிகழ்வுகள்**

- Public Affairs Centre எனப்படும் பொது விவகாரங்கள் மையம் வெளியிட்டுள்ள சிறந்த நிர்வாகங்களை மேற்கொள்ளும் மாநிலங்களின் பட்டியலில் தொடர்ந்து 3வது வருடமாக கேரளா முதலிடம் பிடித்துள்ளது.
  - தமிழகம் 2வது இடம் பிடித்துள்ளது, பீகார் மாநிலம் இந்த பட்டியலில் கடைசி இடத்தில் உள்ளது.
  - Public Affairs Centre – பொது விவகாரங்கள் மையம்
  - இந்த அமைப்பு 1994ம் ஆண்டு சாமுவேல் பால் என்பவரால் தொடங்கப்பட்டது.
  - இந்த மையத்தின் தற்போதைய தலைவர் கஸ்தூரி ரங்கன்




- GST சட்டத்தின் கீழ் மேல் முறையீடு செய்வதற்கான தேசிய அளவிலான மேல் முறையீட்டு தீர்ப்பாயம் தமிழகத்தில் சென்னையில் அமைக்கப்படவுள்ளது.




**உலக நிகழ்வுகள்**

- இந்தியா தொடங்கவுள்ள, சர்வதேச சூரியசக்தி கூட்டமைப்பில் (ISA – International Solar Alliance) 68வது நாடாக மியான்மர் இணைந்துள்ளது. (Myanmar joins International Solar Alliance becomes 68th Member of Grouping)
- **சர்வதேச சூரியக் கூட்டமைப்பு(2015)**
    - பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் 2015ம் ஆண்டு, ஐ.நா பருவநிலை மாற்ற மாநாட்டின் இடையே, பிரதமர் நரேந்திர மோடியும் பிரான்ஸ் அதிபர் பிராங்சுவா ஹொலாலந்தம் சர்வதேச சூரியக் கூட்டமைப்பை தொடங்கி வைத்தனர்.

- விமானத்தில் வந்திறங்கும் பயணிகளின் சேவைகள் அடிப்படையில் பன்னாட்டு விமான நிலையங்கள் குழு, தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது.
    - இதில் பெங்களூர் விமான நிலையம் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
    - ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபி விமான நிலையம் 2வது இடமும், கனடாவின் டாரண்டோ விமான நிலையம் 3வது இடமும் பிடித்துள்ளது.

We Shine Academy™




## விளையாட்டு நிகழ்கள்

- இந்தோனேஷியாவின் ஜகந்தா நகரில் நடைபெற்ற 19 வயது உட்பட்டோருக்கான ஆசிய ஜூனியர் பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய வீரர் லக்ஷயா சென் ஜூனியர் உலக சாம்பியனான குன்லாட் விடிட்ஸ்ரனுவை (தாய்லாந்து) வென்று தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.




## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- கின்ஷான் ஏவுகணை - சுமார் 3000 கி.மீ தூரம் பாய்ந்து துல்லியமாக இலக்கைத் தாக்கும் திறன் கொண்ட கின்ஷான் ஏவுகணையை ரஷ்ய நாடானது வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது.



## வர்த்தக நிகழ்வுகள்

- 28வது ஜி.எஸ்.டி (GST) கவுன்சில் கூட்டம் நிதியமைச்சர் பியூஸ் கோயல் தலைமையில் டெல்லியில் நடைபெற்றது.
  - இக்கூட்டத்தில், சானட்டரி நாப்கின், மார்பிள், கல் மற்றும் மரச் சிலைகள், செறிவூட்டிய பால் போன்றவற்றிற்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
  - 28 சதவீதம் வரி விதிப்பு பொருட்களின் எண்ணிக்கை 35-ஆக குறைக்கப்பட்டுள்ளது.




## முக்கிய தினங்கள்

- சுப்பிரமணிய சிவா நினைவு தினம் - ஜுலை 23
  - ஜுலை 23 – சுதந்திர போராட்ட தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களின் நினைவு தினமாக தமிழகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது.




WeShine Academy ™